பாலியல் வன்கொடுமைக்கும் போதைப் பொருள் நடமாட்டத்திற்குமிடையேதான் போட்டி!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை! முதல் பக்கத் தொடர்ச்சி

கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களைப் பொறுத்த வரையில், அவருக்கென்று ஒரு நீண்ட நெடிய அரசியல் வாழ்க்கை இருக்கிறது. அதைத்தான் சொன்னார்கள், அண்ணாச்சி என்ற தனி அடையாளம் அவருக்கு உண்டு.

இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், 1977இல் இருந்து தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றும் ஆற்றலைப் பெற்றவர், நம்முடைய கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள்.

எம்.ஜி.ஆர். - கலைஞர் - என்னுடைய அமைச்சரவைகளில் சிறப்பாகப் பணியாற்றியவர்!

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அவருடைய தலைமையின்கீழ் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்து பணியாற்றி இருக்கிறார். நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராகப் பணியாற்றிச் சிறப்பாகப் பெயர் பெற்றிருக்கிறார். அதே போல், என்னுடைய தலைமையில் திராவிட மாடல் ஆட்சி அமைந்த போது, வருவாய்த்துறை அமைச்சராக பொறுப்பேற்று பணியாற்றி, சிறப்புக்குரிய இடத்தை அவர் பெற்றிருக்கிறார்.

ஒரு அமைச்சர் எப்படி பணியாற்ற வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருப்பவர்களில் ஒருவர்!

இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், ஒரு அமைச்சர் எப்படி பணியாற்ற வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருப்பவர்களில் அவரும் ஒருவர் என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையோடு குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

பட்டா பிரச்சினையை தீர்க்கக் காரணமாக இருந்தவர்!

ஒரு செய்தியை நான் சொல்லியாக வேண்டும். அவர் வருவாய்த்துறை அமைச்சராக இருந்து பணியாற்றியபோது, நாங்கள் என்ன சொன்னாலும், அந்தக் காரியத்தை உடனுக்குடன் முடித்துத் தரும் ஆற்றலை அவரிடத்தில் நாங்கள் பெற்றோம்.

நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில், தொடர்ந்து தமிழ்நாடு முழுவதிலும் இருந்து, கழகத் தோழர்கள் மட்டுமல்ல; சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல; நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல; அமைச்சர்களே என்னிடத்தில் தொடர்ந்து ஒரு கோரிக்கை வைத்து வந்தார்கள். அது என்ன என்று கேட்டால், பட்டா பிரச்சினை. அந்தப் பட்டா பிரச்சினை இன்னும் தீராமல் இருக்கிறது. அது தான் பெரிய கோரிக்கையாக இருந்து கொண்டிருக்கிறது. அதை எப்படியாவது உடனடியாக வழங்க வேண்டும் என்று எல்லோரும் என்னிடத்தில் தொடர்ந்து எடுத்துச் சொன்னார்கள். அவ்வாறு சொல்லுகிற போது, அதில் இருக்கும் சட்டச் சிக்கல்களை எல்லாம் பற்றிக் கூட எடுத்துச் சொன்னார்கள்.

அந்தச் சட்டச் சிக்கல்களைத் தீர்க்க வேண்டும் என்று சொன்னால், அமைச்சரவையைக் கூட்டி, அந்த அமைச்சரவையில் தீர்மானம் போட்டு, அதைச் சரி செய்ய வேண்டிய சூழ்நிலை இருந்தபோது, நம்முடைய அண்ணாச்சி கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள் தொடர்ந்து என்னிடத்தில் விடாப்பிடியாக வலியுறுத்தி, பின் தொடர்ந்து, அந்தப் பணியை வெற்றிகரமாக நடத்திக் காட்டினோம் என்று சொன்னால், அதற்கு முழு காரணம் அமைச்சராக இருந்த நம்முடைய கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள்தான் என்பதை, நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

தீராவிட மாடல் ஆட்சியில் 23 லட்சத்து 56 ஆயிரம் பேருக்கு பட்டா!

இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், தமிழ்நாட்டில் இதுவரையில் வரலாற்றிலே இல்லாத அளவிற்குப் பட்டா பிரச்சனையை பொறுத்த வரைக்கும், நம்முடைய ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் 23 லட்சத்து 56 ஆயிரத்து மேற்பட்டோருக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது என்பது, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. நம் மாநிலத்தில் மட்டும்தான். அதற்குக் காரணம், நம்முடைய கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள் என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, மழைக்காலம் வருகிற போது, அந்தப் பேரிடர் துறையை கண்காணித்தவர், நம்முடைய கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள்தான். மழை எப்போது வரும்? வெள்ளம் எப்போது வரும்? என்பதை முன்கூட்டியே அறிந்து, அதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்தான் நம்முடைய கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள்.

பெரியமருது - சின்ன மருதுவாக இருந்து செயல்படுபவர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். - தங்கம் தென்னரசு!

இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், நான் பல நேரங்களில் குறிப்பிட்டுச் சொன்னது உண்டு. என்னவென்று கேட்டால், பெரிய மருது சின்ன மருது என்று. பெரிய மருதுவாக நம்முடைய கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களும், சின்ன மருதுவாக நம்முடைய தங்கம் தென்னரசு அவர்களும் இணைந்து, அந்த மாவட்டத்தை இன்றைக்கு வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் கழகத்தின் சார்பிலும், என்னுடைய சார்பிலும், அவர்களுக்கு என் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதை என் கடமையாகக் கருதுகிறேன்.

ஆட்சிப் பொறுப்பேற்று, முதலமைச்சராகப் பொறுப்பேற்பதற்கு முன்னால், முதல் பேட்டியில் பத்திரிகை நிருபர்கள் என்னைச் சந்தித்துக் கேட்டார்கள், "ஆட்சிக்கு வரப் போகிறீர்கள், ஏதாவது செய்தி சொல்ல முடியுமா?" என்று கேட்டபோது, நான் சொன்னேன், 'வாக்களித்தவர்கள் மட்டுமல்ல; வாக்களிக்காதவர்களும் இவர்களுக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோம் என்று வருத்தப்படும் அளவிற்கு என்னுடைய ஆட்சி இருக்கும். அந்தப் பணியை நான் நிறைவேற்றுவேன்" என்று சொன்னேன்.

வாக்களிக்காதவர்கள் மட்டுமல்ல; வாக்களித்தவர்களும் புலம்புகிறார்கள்!

ஆனால் இன்றைக்கு என்ன நிலை என்று கேட்டால், 'வாக்களிக்காதவர்கள் மட்டுமல்ல; வாக்களித்தவர்களும் புலம்பும் நிலையில் இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது'. அது தான் உண்மை. இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். எனவே ரீல்ஸ் ஆட்சி என்பது, வாக்களிக்காத மக்கள் மட்டும் அல்ல; இன்றைக்கு வாக்களித்த மக்களும் புலம்பிக் கொண்டிருக்கும் சூழல் இருந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் நிலை என்னவென்று கேட்டால், விலைவாசி ஒரு பக்கம் உயர்ந்து போய்க் கொண்டிருக்கிறது; நிர்வாகம் சீர் குலைந்து போயிருக்கிறது; பாலியல் குற்றங்கள் இன்றைக்குத் தொடர்கதையாக நடந்து கொண்டிருக்கிறது; தினம், பத்திரிகையை எடுத்தாலும் சரி, தொலைக்காட்சி பார்த்தாலும் சரி, சோசியல் மீடியா பார்த்தாலும் சரி, கொலை, கொள்ளை, திருட்டு, பாலியல் பலாத்காரம் என்று செய்தி இல்லாத நாளே இன்றைக்கு நாட்டில் இல்லை.

சிங்கப் பெண் படையைக் காப்பாற்ற இன்னொரு படை தேவைப்படுகிறது!

இப்போதெல்லாம் குழந்தைகள் கடத்தல் செய்தி தொடர்ந்து ஐந்து, ஆறு நாட்களாக வந்து கொண்டிருக்கிறது; மின்தடை ஒரு பக்கம்; 'சிங்கப்பெண்' என்று ஒரு படையை உருவாக்கினார்கள், அந்த சிங்கப்பெண் படையைக் காப்பாற்றுவதற்கு இன்னொரு படையை உருவாக்க வேண்டிய நிலைதான் இன்றைக்கு நாட்டில் உருவாகி இருக்கிறது.

இரண்டுக்கும் இடையேதான் இன்றைக்கு போட்டி!

நான் சில நாட்களுக்கு முன்பு சொன்னேன். முதலமைச்சராக இருக்கக்கூடியவர், "இரண்டு கட்சிகளுக்கு இடையில்தான் போட்டி" என்று சொன்னார். "இல்லை, இல்லை; மின்வெட்டுக்கும், அரிவாள் வெட்டுக்கும் இடையேதான் போட்டி" என்று சொன்னேன். அது இன்றைக்கு மாறி, பாலியல் வன்கொடுமையா? போதைப் பொருள் நடமாட்டமா? என்று, அந்த இரண்டுக்கும் இடையே தான் இன்றைக்கு போட்டி ஏற்பட்டிருக்கிறது.

மேடைக்கு மேடை அவர் என்ன கத்துகிறார் என்றால், 'தீய சக்தி, தீய சக்தி' என்ற புலம்பிக் கொண்டிருக்கிறார். அந்த தீய சக்தி யார் என்பது நாட்டு மக்களுக்கு நன்றாக புரிந்து கொண்டிருக்கிறது.

சிறப்புக்குரிய மருத்துவர் அருண்குமார்!

அதே நேரத்தில், நம்முடைய கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களுடைய மருமகன் டாக்டர் அருண்குமார் அவர்களைப் பற்றி சொல்ல வேண்டும் என்று சொன்னால், எப்போதுமே நம்முடைய கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள், என்னதான் தனக்கு மகன்கள் இருந்தாலும், அவருடைய மகன்களை எல்லாம் தாண்டி, அதிகமான பாசத்தை நம்பிக்கையை நம்முடைய அருண்குமார் மீதுதான் வைத்திருக்கிறார் என்பதை, நான் பலமுறை பல நேரங்களில் உணர்ந்தது உண்டு.

எனவே அப்படிப்பட்ட அருண்குமார் அவர்கள், இன்றைக்கு மருத்துவராக இருந்து, ஒரு சிறப்புக்குரிய இடத்திற்கு இன்றைக்கு வந்து கொண்டிருக்கிறார். அவருக்கும் இந்த நேரத்தில் என் வாழ்த்துகளைச் சொல்லி, 'வாழ்க மணமக்கள், வாழ்க மணமக்கள்'.

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லி இருக்கும், "வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்குத் தொண்டர்களாய்", மணமக்கள் வாழ்க, வாழ்க என்று வாழ்த்தி, இந்த நல்ல நேரத்தில் உங்கள் அனைவரையும் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றமைக்கு, மீண்டும் ஒருமுறை நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

தேர்தல் ஆணையர்களின் புகார் கடிதத்தை

தலைமைத் தேர்தல் ஆணையருக்கு அனுப்பிய அமைச்சரவைச் செயலாளர்!

தேர்தல் ஆணையத்துக்குள் இருந்த கருத்து முரண்பாடுகள் – தகவல் அறியும் உரிமை மூலம் அம்பலம்!

புதுடில்லி, அக்.27-

இந்தியத் தேர்தல் ஆணையர்களான சுக்பீர் சந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகியோர் அமைச்சரவைச் செயலாளர் (கேபினெட் செக்ரட்டரி) டி.வி. சோமநாதனுக்கு எழுதிய கடிதங்களை, ஒன்றிய அரசின் அமைச்சரவைச் செயலகம் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு அனுப்பியது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (ஆர்.டி.அய்.) மூலம் தெரியவந்துள்ளது.

கொமடோர் லோகேஷ் பத்ரா என்பவர் அவர்களுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் செப்டம்பர் 24 அன்று தனது தகவல் அறியும் விண்ணப்பத்தைத் தாக்கல் செய்தார். அவர் கேட்டிருந்த கேள்விகளுக்குப் பதில் அளித்து அமைச்சரவை செயலகத்தின் தகவல் அலுவலகம் தந்திருக்கும் தகவல்கள், தன்னிச்சையான நடவடிக்கைகளை ஒரு சார்பாக எடுத்த தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராக நடந்து கொண்டிருக்கும் போராட்டங்களுக்கு இடையில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

மூத்த துணைத் தேர்தல் ஆணையர் மனீஷ் கார்க், தேர்தல் ஆணையர்களுடன் கலந்தாலோசிக்காமல் பணி ஒதுக்கீட்டு உத்தரவைப் பிறப்பித்ததாகத் தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சந்துவும், விவேக் ஜோஷியும் ஜூலை 29 தேதியிட்டு தனித்தனியாக எழுதியிருந்த கடிதங்களில் குற்றம் சாட்டியிருந்தனர்.

அக்கடிதங்களை, அமைச்சரவைச் செயலகம் பணியாளர் மற்றும் பயிற்சித் துறைக்கு அனுப்பியதுடன், அதைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் கடிதத்தின் நகலைத் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரின் அலுவலகத்திற்கும் அனுப்பியுள்ளது.

ஆணையர்களின் கடிதங்கள் அவர்களின் தனிப்பட்ட தகுதியில் எழுதப்பட்டவை என்றும், அவை இந்தியத் தேர்தல் ஆணையத்திடமிருந்து வந்த முறையான தகவல் அல்ல என்றும் முடிவு செய்யப்பட்டு, அமைச்சரவைச் செயலாளர் அவற்றின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிகிறது. அந்த இரண்டு ஆணையர்களுக்கும், அவர்களின் கடிதங்கள் பெறப்பட்டதற்கான ஒப்புகை மட்டுமே அனுப்பப்பட்டது.

சந்துவின் கடிதத்துடன், ஜூலை 28 அன்று துணைத் தேர்தல் ஆணையர் கார்க் பிறப்பித்த உத்தரவின் நகலும் இணைக்கப்பட்டிருந்தது. அந்த உத்தரவில், தனக்கும், தகவல் தொழில்நுட்பத் துறை தலைமை இயக்குநர் சீமா கன்னா மற்றும் துணைத் தேர்தல் ஆணையர் சஞ்சய் குமார் உள்ளிட்ட பிற தேர்தல் ஆணைய அதிகாரிகளுக்கும் பணிகள் ஒதுக்கப்பட்டிருந்ததை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்

பொறுப்பைக் கவனிக்கும் 'இணைப்பு அதிகாரி'யாக அதன்படி, துணைத் தேர்தல் ஆணையர் (நிர்வாகம்) பதவியேற்ற மனீஷ் கார்க், தனக்கு இணையான மற்றும் மூத்த அதிகாரிகளின் பணி ஒதுக்கீடு குறித்து, தேர்தல் ஆணையத்துடனோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனோ எந்த ஆலோசனையும் நடத்தாமல் புதிய உத்தரவைப் பிறப்பித்துள்ளார். மேலும், தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதியோ அல்லது ஆலோசனையோ இன்றி இத்தகைய நடவடிக்கைகளை எடுக்கக் கூடாது என்று அனைத்து அதிகாரிகளுக்கும் வாய்மொழியாகவும் எழுத்துப் பூர்வமாகவும் பலமுறை அறிவுறுத்தப்பட்டிருந்தும், அவர் இவ்வாறு செயல்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையர்கள் தெரிவித்து உள்ளனர்.

தேர்தல் ஆணையத்தின் தகவல் தொழில்நுட்பத் துறையின் கோப்புகளைக் கன்னாவின் கீழ் பணிப் பகிர்வு செய்யும் முறையை மாற்றுவதற்கான கார்க்கின் முடிவு குறித்து ஆணையர்கள் ஏற்கெனவே கவலை கொண்டிருந்தனர். முன்னதாக, அந்தக் கோப்புகள் ஞானேஷ் குமாருக்கும் சென்றிருந்தன. இந்த சீமா கன்னாவும், அவரது தலைமையின் கீழான தேர்தல் ஆணையத்தின் தகவல் தொழில்நுட்பத் துறையும் தற்போது ஒரு சர்ச்சையின் மய்யப் புள்ளியாக உள்ளன.

சீமா கன்னா அறிமுகப்படுத்திய புதிய தகவல் தொழில்நுட்ப முறைதான், வாக்காளர் பட்டியலைப் பராமரிக்கும் பொறுப்பில் உள்ள தேர்தல் பதிவு அதிகாரிகளுக்கு அந்தத் தரவுத்தளத்தை அணுகும் வாய்ப்பையே மறுத்துவிட்டது.

மேலும், தேர்தல் ஆணையர்களுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் இருந்ததாகவும், ஜோஷி மற்றும் சந்து ஆகியோர் தலைமைத் தேர்தல் ஆணையர் குமாருடன் பல முறை முரண்பட்டதாகவும் அந்தப் புலனாய்வு தெரிவித்தது. இதனை மறுத்துள்ள தேர்தல் ஆணையம், அனைத்து முடிவுகளும் ஒருமனதாகவோ அல்லது விதிகளுக்கு உட்பட்டு பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையிலோ எடுக்கப்பட்டவை. என்று தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையத்தின் முடிவுகள் ஒருமித்த நிலையில் எடுக்கப்பட்டன என்று குற்றச்சாட்டுகளுக்கு ஆணையம் பதில் அளித்திருந்த நிலையில், அதிகாரத்தை மீறி ஒரு துணை ஆணையர் செயல்பட்டதும், தேர்தல் ஆணையத்தின் தரவுத் தளத்தின் நிர்வாகம் குறித்து தேர்தல் ஆணையர்களின் கருத்துகளுக்குள் முரண்பாடுகள் இருந்ததும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தற்போது கிடைத்துள்ள ஆவணங்களில் இருந்தும் தெரிய வருகிறது.

ஏற்காட்டிற்கு வருவதை சுற்றுலாப் பயணிகள் தவிர்க்க வேண்டும்!

மாவட்ட ஆட்சியர் வேண்டுகோள்!

சேலம், அக். 27-

தமிழகத்தில் கடந்த அக்டோபர் 15 ஆம் தேதி வடகிழக்கு பருவமழை தொடங்கிய நிலையில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. சேலம் மாவட்டத்தில் நேற்று முதல் கனமழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு ஆத்தூர், வாழப்பாடி ஆகிய பகுதிகளில் கனமழை பெய்துள்ளது. ஏற்காடு மலைப்பகுதிகளிலும் கனமழை கொட்டித் தீர்த்தது.

ஏற்காட்டில் மிக கன மழை பெய்து வருவதால் சுற்றுலா பயணிகள் வர வேண்டாம். மலைப் பாதைகளில் நிலச்சரிவு, பாறைகள் உருண்டு விழும் அபாயம். உள்ளூர் மக்கள் மழையின் காரணமாக வாகனங்களில் பயணிப்பதை முற்றிலும் தவிர்க்க வேண்டும் என சேலம் மாவட்ட ஆட்சியர் இளம் பகவத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதேபோல், உள்ளூரைச் சேர்ந்த பொதுமக்களும் மழை நேரங்களில் வாகனங்களில் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்றும், ஏற்காடு செல்லும் சாலையில் சில போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதால் காவல் துறையினருக்குப் பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரபல சமையல் கலைஞர்

பத்மஸ்ரீ செஃப் தாமு மறைவு!

உணவு தயாரிப்பில் கின்னஸ் சாதனை படைத்தவர்!

சென்னை, அக். 27-

பிரபல சமையல் கலைஞர் செஃப் தாமு (வயது 72) உடல் நலக்குறைவு காரணமாக நேற்று முன்தினம் (அக்.25) காலமானார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தமிழகத்தில் மிகவும் பிரபலமான சமையல் கலைஞராக திகழ்ந்தவர் செஃப் தாமு. தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பான சமையல் நிகழ்ச்சிகளின் மூலம் அனைத்து தரப்பிலும் புகழ் பெற்றவராக விளங்கினார்.



சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஹோட்டல் மேலாண்மைத் துறையில் முனைவர் பட்டம் பெற்ற முதல் இந்தியச் சமையல் கலைஞர் செஃப் தாமு ஆவார்.

கடந்த 2010ஆம் ஆண்டு தொடர்ந்து 24 மணி நேரம், 30 நிமிடங்கள், 12 வினாடிகளில் மொத்தம் 617 வகையான உணவுகளை தயாரித்து கின்னஸ் உலக சாதனை படைத்தார். சமையல் துறையில் செஃப் தாமுவின் சாதனையை பாராட்டி 2025ம் ஆண்டு ஒன்றிய அரசு அவருக்குப் பத்மஸ்ரீ விருது வழங்கிச் சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; லாட்டரியிலே ஏதாவது பணம் பாத்திட்டியா? சிரிச்சிக்கிட்டே இருக்கே!

பட்டணம் : **ஆமாமய்யா; சிரிப்பாய்தான் இருக்கு. ஏன் தெரியுமா? நான் ரேஷன் கடையிலே இலவச ரைஸ் வாங்கிட்டு வந்தேன். அதே ரேஷன் கடையிலே 30 ரூபாய் கொடுத்து த.வெ.க. ஆட்சியின் அரிசி வாங்கன ஒருத்தரு, நான் வாங்குன ஃபிரி ரைஸை பார்த்துட்டு, அதுவே நல்லா இருக்குன்னு சொல்லிட்டு போனாருப்பா. அதை நினைச்சேன். ஒரே சிரிப்பாய் வருது!**